விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 034 வள்ளுவர் ஆண்டு 2056 தை 09 புதன்கிழமை (22.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## பயங்கரவாத சட்டம் பயன்படுத்தப்படும்
அமைச்சர் பிமல் ரத்நாயக்க

07ஆம் பக்கம் பார்க்க



## வடக்கு அபிவிருத்தியில் அதிக கவனம்
ஜனாதிபதி அநுர


05ஆம் பக்கம் பார்க்க



## நினைவேந்தல்கள் கவனிக்கப்படும்
பாதுகாப்பு அமைச்சர்

03ஆம் பக்கம் பார்க்க

## எனது பயணத் தடை தொடர்பில்
# சுமந்திரனை விசாரித்தால் உண்மையைக் கண்டறியலாம்
## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

இந்தியாவுக்கு நான் பயணம் மேற்கொண்ட போது எனக்கு ஏற்பட்ட பயணத்தடை தொடர்பில் சுமந்திரனை விசாரித்தால் உண்மையைக் கண்டறிய முடியும் என பாராளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மணல் கடத்தல் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் உரிய அனுமதிப் பத்திரமில்லாமல் மணல் கடத்தி வந்த கனரக வாகன மொன்று யாழ்.சாவகச்சேரிப் பகுதியில் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது 15


## நிதி மோசடி மருதங்கேணியில் இரு பெண்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நிதி மோசடியில் ஈடுபட்ட இரு பெண்கள் மருதங்கேணியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிதி நிறுவனம் ஒன்றில் அடகு வைக்கப்பட்டுள்ள ஒருதொகை 15

## சிறீதரனுக்கு ஏற்படுத்தப்பட்ட தடை தொடர்பில் விசாரிக்க உத்தரவு
### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறீதரன் எம்.பிக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பி விவகாரம் தொடர்பில் நேற்று 04

## தொப்புள்கொடியுடன் பிறந்த சிசுவின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு
### கைதடியில் மூன்று பெண்கள் கைது

(சாவகச்சேரி)

தொப்புக்கொடியுடன் பிறந்த சிசுவின் சடலம் ஒன்று கைதடிப் பகுதியில் உள்ள தோட்டக்கிணற்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலி 15

## ஐ.எம்.எப் ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்
### பிரதி அமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை செய்துள்ள உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதி பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும நேற்றுப் பாராளுமன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதன்மூலம்பொது மக்களின் நிதிச் 15

## இளம் குடும்பஸ்தர் நெடுந்தீவில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு திருலிங்கபுரம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக 04

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு
## அர்ச்சுனா எம்.பியை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட சுயேட்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்து விசாரணை நடத்துமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மாவட்ட 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருப்பினை விற்றுத் தீர்த்தல்

கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகளுக்கான ஆடைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் 30 - 50 வீத விலைக் கழிவில்...

- கொள்வனவு செய்பவர்கள் புதியதோர் தொழில் முயற்சியினைத் தொடங்கலாம்.
- ஏற்கனவே வியாபாரம் செய்பவர்களும் கொள்வனவு செய்து தமது வியாபாரத்தை விஸ்தரிக்கலாம்.

(3085)

தொடர்பு: **077 801 0219** | நேரம்: பி.ப 3 - 7 மணி வரை


## மண்டைதீவில் பாலஸ்தாபனம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிடுக்கை வைரவர் ஆலய பாலஸ்தாபனம் தேய்பிறை அட்டமித் திதியாகிய இன்று 22 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.(ம-7)

## அர்ச்சுனா...

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுக் காலை யாழில் இருந்து பாராளுமன்றம் நோக்கி பயணித்த வேளையில், அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழிமறித்துள்ளனர்.

விஜபி விளக்குகளைப் பயன்படுத்தி மற்ற வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அர்ச்சுனா காரைச் செலுத்தியதால் எம்.பியின் காரை பொலிஸார் தடுத்து நிறுத்திய போது அங்கிருந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரிக்கும் அர்ச்சுனாவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அங்கு எம்.பியிடம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கேட்ட போது கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக மோட்டார் போக்குவரத்து சட்டம் மற்றும் குற்றவியல் சட்டதின் கீழ் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் அநுராதபுரம் நீதிமன்றத்தின் கவனத்துக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து அர்ச்சுனா எம்.பியைக் கைது செய்யுமாறு அநுராதபுரம் நீதிமன்றம் உத்தர விட்டது. (ம-7)


## காணி தேவை

முறிகண்டி அக்கராயன் வீதிக் கரையோரமாக 2 ஏக்கர் உறுதிக் காணி தேவை.

**070 700 4900**

(C-2101)



## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து றொட்டி போடுதல், பிறைட் றைஸ் தயாரித்தல், றொட்டி வேலை செய்தல், உணவு பரிமாறுதல் போன்ற வேலைகளில் அனுபவம் வாய்ந்த பணியாளர் தேவை.

(C-2108)

தொடர்புகளுக்கு:

**077 649 1027**


## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 . 09 . 1953 | 19 . 01 . 2025 |

எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பொ.அருணகிரிநாதன்(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களது அன்பு மனைவியும் கல்லூரியின் ஆசிரியர் திரு.அ.அருண்ராஜ் அவர்களது அன்புத் தாயாருமான

அமரர்

### திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்...

யா/ வேலணை மத்திய கல்லூரிச் சமூகம்.

(C-2105)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1934 - 03 - 24 | 2025 - 01 - 18 |

### திருமதி திருஞானச்செல்வம் பார்வதி
### (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வீதி, வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி திருஞானச்செல்வம் பார்வதி(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) அவர்கள் 18.01.2025 கடந்த சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கலட்டி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை திருஞானச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செந்தமிழ்செல்வி மற்றும் செந்தமிழ்ச்செல்வன் (பிரான்ஸ்), குமரகுரு(லண்டன்), உஷாந்தி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நித்தியராசா(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), பார்த்தீபன்(லண்டன்), தர்சினி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஜனனி மற்றும் பிரணவி, டதுசிகா, கபிலாஷ், டதுசன், கபிசன், சஹீனா, விதுரதர்சன், பரத், மிதுவரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேலணை பெருங்குளம்,
முத்துமாரி அம்மன் கோவில் வீதி,
வேலணை, 4ஆம் வட்டாரம்.

உஷாந்தி(மகள்) - +447830729671
செல்வன்(மகன்) - +336518[illegible]
குரு(மகன்) - +447438[illegible]
நித்தியராசா(மருமகன்) - +94741918504

தகவல்: குடும்பத்தினர்

(C-2100)

## கண்ணீரால் காணிக்கை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 . 09 . 1953 | 19 . 01 . 2025 |

அமரர்

### திருமதி யோகேஸ்வரி அருணகிரிநாதன்

இன் முகமும் மென்மொழியும் அழகின் அடையாளமான
நல்லற மனையாள் அமரர் திருமதி.யோகேஸ்வரி
அருணகிரிநாதன், கல்விக்கள நாயகன், சமூகப்பணியும்,
கல்விப்பணியும் உயிர் மூச்சாகக்கொண்ட கணவனின்
துணைவி வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பூவுலகு
நீத்தநாள்! எமக்கெல்லாம் ஆற்றொணா துன்பநாள்!
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டும்

(C-2104)

பிரிவின் துயரில்
உன் துணைவரின் தோழர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தல் நிகழ்வு குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்!

## தடுப்பது நோக்கமல்ல என்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



(கொழும்பு)

**நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் அதிக கவனம் செலுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிழந்த தமது உறவுகளை நினைவேந்த எந்த இனத்தவர்களுக்கும் முழு உரிமையுண்டு. அதை எமது அரசு ஒருநாளும் தடுத்து நிறுத்தாது.

ஆனால் வடக்கு, கிழக்கில் சில நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலையீடு ஆதிக்கம் செலுத்துவதால் அது வடக்கு கிழக்கிற்கு வெளியில் வேறொரு கோணத்தில் பார்க்கப்படுகின்றது.

தெற்கில் உள்ள ஒரு தரப்பினர் அதைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். இதனால் வடக்கு - தெற்கு அரசியல்வாதிகளுக்கிடையில் பொது வெளியில் கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றன.

எனவே நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் அதிக கவனம் செலுத்தப்படும். ஆயினும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவது எமது நோக்கம் அல்ல." என அவர் தெளிவூட்டினார். (நி-6)

# குறைவடைந்த தேயிலை உற்பத்தி

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் தேயிலை பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள இனந்தெரியாத பங்கஸ் தொற்று காரணமாக சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியாக நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த பங்கஸ் தொற்றால் தேயிலை கொழுந்துகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகத் தேயிலை உற்பத்தியானது நூற்றுக்கு 40 முதல் 50 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி பலாங்கொடை உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பங்கஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

# வாகன இறக்குமதி தொடர்பான எம்.பிக்களுக்கான சிறப்பு அனுமதி ரத்து

## அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இனிமேல் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான சிறப்பு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (நி)

# கோழி இறைச்சி விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

மக்களுக்கு போதிய வருமானம் கிடைக்காத காரணத்தினால் நாளாந்த கோழி இறைச்சி விற்பனை 100 மெற்றிக் தொன்களினால் குறைந்துள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் எச். குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளாந்தம் 600 மெற்றிக் தொன் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது நாளாந்தம் கோழி இறைச்சி விற்பனை 500 மெற்றிக் தொன் ஆகக் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன் இந்த நாட்களில் முட்டை ஒன்றின் விலை 30 முதல் 33 ரூபாய் வரை குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை குறைவால் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் உற்பத்தி செலவை ஈடுகட்ட முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# மரண அறிவித்தல்

## பெரியான் வடிவேலு

(ஓய்வு பெற்ற பரிசாரகர் பல்துறை சார் சிகிச்சைப் பிரிவு)



தோற்றம் 13.07.1945 மறைவு 21.01.2025

*நகுலேஸ்வரா வீதி கிரிமலையைப் பிறப்பிடமாகவும் சோளங்கன் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியான் வடிவேலு அவர்கள் நேற்று 21.01.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.*

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியான் - தெய்வி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயிலன் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் செல்லமுத்து அவர்களின் பாசமிகு கணவரும் இராமேஸ்வரி (விடுதிச் சகோதரி ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை), சர்வேஸ்வரி (ஆசிரியர் - பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்), தில்லைநடராசன், காலஞ்சென்ற லோகநாதன், கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன்(கிருபா), விண்டிரெட் தேவானந்தா(விஷி), சிவப்பிரியா (உமா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை, நடேசு மற்றும் நாகம்மா (மாம்பழம்), சின்னம்மா (பூரணம்), செல்லம்மா(பேபி), தியாகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அபிஷா, அபிலாஷா, தன்சியா, ஜெனிபர், ஜெனிஷா, ஜெலக்சி, கிஷானா, திஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.01.2025 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேந்தாங்குளம் ஐந்துகண் மதவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சோளங்கன்,**
**இளவாலை.**

(C-2109)

இராமேஸ்வரி(மகள்)

# புற்றுநோய்க்கான சிகிச்சைகளை மேம்படுத்த விரைவில் நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் திட்டவட்டம்

புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு 2013 ஆம் ஆண்டு 29 மில்லியன் டொலர் திட்டத்தைத் தொடங்கியது. ஆனால் அந்த திட்டம் தாமதமாகியுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய இயந்திரங்கள் யாழ்ப்பாணம், மட்டக் களப்பு, காலி, கண்டி மற்றும் அபேக்ஷா வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டதாகவும், இதனால் இது தொடர்பான சிகிச்சை தொழில்நுட்பம் விரைவாக மேம்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, அநுராதபுரம், குருநாகல் மற்றும் பதுளை ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் இது செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து இயந்திரங்களும் 8 மாத காலத்திற்குள் மாற்றப்பட்டு அனைவருக்கும் சிகிச்சை வழங்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஜாம்பவான் லசித்மலிங்கவின் KILLER புத்தகம் வெளியீடு



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, 'KILLER' என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றதுடன் இந்தப் புத்தகத்தில் பந்துவீச்சு பற்றிய 21 விடயங்கள் உள்ளடங்கியுள்ளது.

இப் புத்தக வெளியீட்டு விழாவில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான சனத் ஜயசூரிய, மாவன் அத்தபத்து, மஹெல ஜெயவர்தன, சமிந்த வாஸ், அஜந்த மெண்டிஸ் மற்றும் பல முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா கிரிக் கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் ஏனைய அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் லசித்மலிங்க எழுதிய புத்தகத்தை அவரது தந்தை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வாவிடம் வழங்கியதுடன் பின்னர் ஏனைய விருந்தினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (நி-6)

## சிறீதரனுக்கு...

பாராளுமன்றில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

குறித்த விடயத்துக்குப் பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறீதரன் எம்.பிக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## நெடுந்தீவில்...

மீட்கப்பட்டுள்ளார்.

திருலிங்கபுரம் பகுதியைச் சேர்ந்த அமலதாசன் மதன்குமார் (வயது 39) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் குடும்பத்தகராறு காரணமாக தனித்து வாழ்ந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றவேளை கதவு வழியாக குருதி வடிந்திருப்பதை கண்டு, கதவினை உடைத்து சென்றவேளை வீட்டின் விறாந்தையில் தூக்குக் கயிறு அறுந்த நிலையில் இறந்து காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## ஐ.பி.எல், லக்னோ அணிக்கு புதிய கேப்டன் ரிஷாப் பண்ட்

ஐ.பி.எல், 18ஆவது சீசன் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான வீரர்கள் "மெகா" ஏலத்தில் இந்திய விக்கெட் கீப்பர் பேட்டர் ரிஷாப் பண்ட், அதிகபட்சமாக ரூ. 27 கோடிக்கு லக்னோ அணியில் ஒப்பந்தமானார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் லக்னோ அணிக்கு புதிய கேப்டனாக ரிஷாப் பன்ட் நியமிக்கப்பட்டார். அதேவேளை ஏற்கனவே இவர், டில்லி அணிக்கு கேப்டனாக செயல்பட்டார்.

இதுதொடர்பில் ரிஷாப் பண்ட் கூறுகையில், "லக்னோ அணிக்கு கேப்டனாக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சி. அணியின் வெற்றிக்கு 200 சதவீதம் பங்களிப்பேன். அணியில் திறமையான இளம் வீரர்களுடன், அனுபவ வீரர்கள் இருப்பது பலம்.

அணியை சிறப்பாக வழிநடத்துவது குறித்து நிறைய கேப்டன், சீனியர் வீரர்களிடம் இருந்து கற்றுக் கொண்டுள்ளேன். ஒரு வீரரை எப்படி கவனித்துக் கொள்வது என்பதை ரோகித் சர்மாவிடம் இருந்து தெரிந்து கொண்டேன். சகவீரர்களுடன் இணைந்து முதன்முறையாக கோப்பை வென்று தர முயற்சிப்பேன்" என்றார். (நி-6)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3288

**ஜானுயா**

வாழ்க்கையில ஒவ்வொரு பிரச்சினை வரும்போதெல்லாம் நம்மள செதுக்க வந்துருக்குன்னு நினைச்சுத்தான் அத ஃபேஸ் பண்றோம்
ஆனா முடிச்சிட்டு போகும் போது தான் தெரியுது..
அது செதுக்க வரல சிதைக்க வந்துருக்குன்னு...




**சுரேக்கா**

நண்பர்களே திருமண வாழ்க்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன்.
பெண் பார்ப்பது என்பது ஒரு தலை ராகம்
ஏற்றுக் கொள்வது அபூர்வ ராகம்.
திருமணம் தெய்வீக ராகம்
திருமணத்திற்குப் பின் மௌன ராகம்



**லக்சிகா**




நண்பன் போட்ட சோறு தினமும் தின்பேன் பாரு

இவ்வளவு நாளு சோறு போட்ட நான் மடையனா?

**தரசுதாஸ்**

என்னதான் தைரியமான ஆளா இருந்தாலும்.....
நாம சமைச்ச சாப்பாட்ட சாப்பிட நமக்கே கொஞ்சம் பயமாத்தான்யா இருக்கு.



**மிதின்**

கல்யாணத்துக்கும் ஜல்லிக்கட்டுக்கும் ஒரு ஒற்றுமை இருக்கு...




**வந்தேஷ்**

ஒரு வாரம் பொங்கல் லீவ ஜாலியா என்ஜாய் பண்ணிட்டு.
நாளைக்கு வேலைக்கு போக வேணும்ன்னு நினைச்சாலே மனசு பதறுது...




• நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துவோம்

## உலக வங்கி பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி



(கொழும்பு)

**வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.**


ஜனாதிபதிக்கும் உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும் நீர் வசதிகளை வழங்கவும் வடக்கு மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, உலக வங்கியின் பிராந்திய உள்நாட்டுப் பணிப்பாளர் (நேபாளம், மாலைதீவு, இலங்கை) டேவிட் சிஸ்லன், உலக வங்கி மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபன (இலங்கை மற்றும் மாலைதீவு) உள்நாட்டுப் பணிப்பாளர் கெவோர்க் சார்க்சியன், உப தலைவரின் விசேட உதவியாளர் கிஷான் அபேகுணவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி-6)

# மீண்டும் கரையொதுங்கிய மிதவை



(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை ஆதிகோவிலடி கடற்கரையில் மிதவை ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக குறித்த மிதவை கரையொதுங்கியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படும் அதேவேளை இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கரையொதுங்கிய மிதவையை இராணுவம், கடற்படை, பொது மக்கள் எனப் பலர் பார்வையிட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் மிதக்கும் கூடாரங்கள், மிதவைகள் போன்றன கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)

# பருத்தித்துறைக் கடலில் சூட்டுப் பயிற்சி

## கடலுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு பிராந்திய இலங்கை கடற்படையினர் நாளை மறுதினமும் 27 ஆம் திகதியும் பருத்தித்துறை கடலில் கடற்படை கலங்களான P475, P481 ஆகிய கலங்களில் இருந்து சூட்டுப்பயிற்சி மேற்கொள்ள இருப்பதால் மீனவர்களை குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கரையோர காவற்படையின் வடக்கு பிராந்திய பணிப்பாளர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (நி-6)

# இராசிபலன்

22.01.2025
தை 09, புதன்கிழமை
அட்டமி பிற்பகல் 2.43 மணிவரை
சுவாதி பின்னிரவு 2.02 மணிவரை

சுபநேரம் 5.05-6.35 மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை
அட்டமி, நவமி

சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி, ரேவதி

வளவன்

**மேஷம்** – விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** – தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** – திடீர் பயணத்தால் நன்மையுண்டு, செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**மகரம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**ரிஷபம்** – கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** – மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்** – ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** – சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி** – பணத்தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**தனுசு** – விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மீனம்** – தொழில் கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் தேவை, வளர்ச்சி காண வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டிய நாள், வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**பொன்னை விட மதிப்பு மிக்கது விவசாயம் நடக்கும் மண் தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை மண் தந்த மண்ணியல் நிபுணர் அமரர் ஜோசுவா!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

மண்ணின் முக்கியத்துவம் பயிர்ச் செய்கையில் மட்டுமல்ல சூழல் தொகுதியின் முழுமையான இயக்கத்திலும் பெரிதும் உணரப்பட்டுள்ளது. தேவையான ஊட்டச்சத்து, அவசியமான நீர் மற்றும் வளர்வதற்குகந்த சூழல் என்பன மண்ணிலிருந்து பயிருக்கு கிடைக்கின்றது. மண்ணிலும் உயிர்ப்புடைய மண் தனித்துவமானது. உயிர்ப்பு என்பது இங்கே நன்மைதரும் பலவகை நுண்ணங்கிகள் சூழமைவுடன் காணப்படுவது எனப் பொருள்படும். அதிலும் எங்கள் மண் எனும் போது எமக்கும் மண்ணுக்குமான உறவுநிலை இறுக்கமடைகின்றது. அப்படியொரு இடைவிடாத பிணைப்பு எமக்கும் நாம் பிறந்த மண்ணுக்குமானது.

இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல் வடமாகாணத்தின் மண்ணை அகழ்ந்தெடுத்து ஆய்வு செய்து அதன் தன்மைகளை, வகைகளை கண்டுபிடித்து அவற்றுக்கெல்லாம் பாகுபாடு கொடுத்த பெருமைக்குரிய மண்ணியல் நிபுணர் யாழ்ப்பாணத்தின் ஏழாலையில் பிறந்து அந்த மண்ணுக்கு பெருமை சேர்த்த அமரர் கலாநிதி வில்லி தனபாலன் ஜோசுவா அவர்களாவார். தாய்தந்தையருக்கு பிறந்த ஐவரில் இரண்டாமவராக அவதரித்த அமரர் ஜோசுவா அவர்கள் தாம் பிறந்த பிறப்புக்கான அர்த்தத்தை பெற்ற மனாங்கள் நிதம்மகிழ பாரினில் புலமையில் உயர்ந்து பிறந்த மண்ணின் பெருமைமிகு மைந்தனுமானார். மேற்கூறிய சிறப்புக்குரிய பெருமகனார் தனது 87 ஆவது வயதில் இயற்கையெய்தி தாம் பிறந்த மண்ணினுள் அமரருமானார்.

எமது பிறப்பும் வளர்ப்பும் வாழ்வும் இறப்பும் மண்ணுடனேயே அதன் பாசப் பிணைப்புடனேயே ஒன்றிவிடுகின்ற போதும் அந்த மண்ணின் அமைப்பை அதன் சிறப்பை அளவறிந்து, அருமையறிந்து, இன்னமும் துல்லியமாக அதனை பாகுபடுத்தி பெயரிட்டும் அழகுபார்த்ததோடு அதன் முக்கியத்துவத்தை, அதிலேற்படும் மாற்றங்களை வேறுபடுத்தி இனம்பிரித்து தகவல்திரட்டாக தகவல்களஞ்சியமாக விரிவான படங்களின் மூலம் விளக்கிய பெருமை அமரர் ஜோசுவா அவர்களையே சாரும். வடமாகாண மண்ணைப் பற்றி முணுமுணுத்தாலே அமரர் ஜோசுவாவின் பெயரும் அவசியம் சேர்த்து உச்சரிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகும்.

என்றுமே புன்சிரிப்புடன் இருக்கும் இவரின் மகிழ்ச்சியான முகமும் அளவறிந்த பேச்சும், தன்னடக்கமான அமைதியான தோற்றமும் அவருள்ளிருந்த ஆளுமையும் போற்றத்தக்கது. விவசாயத் திணைக்களத்தில் மண்ணியல் நிபுணராகவும் இன்னும் நிலப்பயன்பாட்டு துறையில் பணிப்பாளராகவும் கடைமையாற்றினார். அதிலும் மண்ணில் புலமையாளனாக பரிணமிப்பது என்பது இன்னுமொரு பாக்கியம். கல்வியிலும் ஆய்விலும் அனுபவத்திலும் மக்களுக்கான பணியை செய்வதில் சிறந்து விளங்கிய இப்பெரியவரால் வலிகாமத்தில் அமைந்த ஏழாலை மண் கௌரவம் பெற்றதுடன் இலங்கை விவசாயத் திணைக்களமும் மேலும் பெருமைபெற்றது எனலாம்.

அமரர் ஜோசுவா அவர்கள் ஆரம்பக்கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரியிலும் இளமாணி பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தில் வேதியியலிலும் கற்று 1967ஆம் ஆண்டு கனடாவில் தனது கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். இலங்கையின் விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் விவசாயத் திணைக்களத்தில் ஆய்வாளராக பல ஆண்டுகள் பணிபுரிந்து அரச பணியிலிருந்து ஓய்வுபெற்றார். விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் நிலப்பயன்பாடு பற்றிய திட்டமிடல்களில் இவரது புலமைத்துவத்தின் பலனை அவரிடமிருந்து பலர் பெற்றிருக்கின்றனர். விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றிய அமரர் ஜோசுவா அவர்கள் ஓய்வின்றி உழைத்த பெருமகனார். இவரது மண்ணியல் நிபுணத்துவத்தை இலங்கையின் மண்ணைப்பற்றி ஆய்விலீடுபட்ட கல்விமான்கள் பயன்படுத்தியதும் அவரின் ஆலோசனைகளை உள்வாங்கி ஆய்வுகளை விரிவாக்கியதும் உண்டு. மேலும் நிலபயன்பாட்டின் முழுவடிவத்தையும் வரைபடங்கள் மூலம் விளக்கி மண்ணின் மகத்துவத்தையும் அதன் இயல்புகளையும் வெளியிட்டு அரும்பணியாற்றியவர். எமது பிரதேசத்து மண்ணின் நிலபயன்பாட்டை ஆய்வு செய்து அதனது சிறப்பை, பயன்படும் தன்மையை துல்லியமான ஆய்வுத்தக வல்களை திரட்டி பரிந்துரை செய்ததுடன் பலரது ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் இன்னமும் திகழ்கின்றார்.




வடபகுதி மண்ணை ஆய்ந்தெடுத்து அவற்றுக்கான விஞ்ஞான விளக்கத்துடனான படங்களை உருவாக்கி அதனை சஞ்சிகைகளில் வெளியிட்டு நூல்களில் பதிப்பித்து தனது ஆய்வுப் புலமையை நிரூபித்தவர் என்றால் மிகையாகாது.

இலங்கையின் மண்ணியல் ஆய்வியல் நிபுணரான மறைந்த கலாநிதி பாண பொக்கே அவர்களுடன் இணைந்து விவசாயத் திணைக்களத்தில் பணிபுரிந்த காலத்தில் மண்ணியல் தன்மைகளை கண்டறிந்து அவற்றை ஆவணப்படுத்திய எமது தேசத்தின் பெருமைக்குரியவர். வடபகுதி மண்ணின் வகைகள், அவற்றின் தனித்துவத்தன்மைகள் மற்றும் அவற்றிலுள்ள கூறுகள் என அனைத்தையும் வடமாகாணத்தின் பல இடங்களில் அகழ்ந்து ஆய்வுமூலம் கண்டறிந்து வெளியிட்ட பெருமகனாரின் ஆக்கங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் இன்றும் மண்ணினை புரிந்து கொள்ள விரும்பும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் மேற்படிப்பு மாணவர்களுக்கும் மிகப்பெரிய பொக்கிஷமாகும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி நிறுவனத்தில் நிபுணராக, ஆலோசகராகவும் கடமையாற்றியவர். இவற்றுக்கும் மேலாக இலங்கையில் அமைந்துள்ள அனைத்துலக நீர் முகாமைத்துவ நிறுவனத்தில் ஆலோசக ராகவும் பணியாற்றியுள்ளார். வடபுலத்து நீர் பற்றிய ஆய்வுகளில் தன்னை இணைத்துக் கொண்ட அமரர் ஜோசுவா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கான நீரை வன்னிப் பரப்பிலிருந்து பெறுவதற்கு வழி வகைகளை எடுத்துக்கூறியவர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வகைதொகையின்றி ஆழமாக தோண்டப்படும் குழாய்க் கிணறுகள் பற்றியும் தொடர்ந்து தோண்டுவதால் ஏற்படும் பாதிப்பு பற்றியும் மக்களுக்கு விளக்கமாக தெரிவித்தவர். மேலும் வடபகுதி நீர் உவர்நீராவது பற்றிய விடயங்களை ஆய்வுப்பரப்பில் வெளியிட்டு நன்னீர் வில்லையின் தன்மைபற்றியும் அதனை பேணவேண்டிய வழிமுறைகளையும் பரிந்துரைத்தவர். தனது தொழிலில் நேர்த்தியாக அறிவுக் களஞ்சியமாக, அனுபவசீலராக தாமாகவே முன்னின்று ஆய்வு செய்வதில் சிறப்புக்குரியவராக பணிபுரிந்த காலத்தில் துடிப்புமிகு இளைஞனாகவே வலம்வந்த மகாசீலராவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடம் கிளிநொச்சியிலிருந்து 1998களில் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் இயங்கியபின் மீண்டும் விவசாயப் பீடத்தை கிளிநொச்சி நோக்கி நகர்த்துவதற்கான முன்னெடுப்புகள் 2012ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டபோது அறிவியல் நகரில் தற்போதமைந்துள்ள நிலத்தின் தன்மை பற்றியறிய உருவாக்கப்பட்ட குழுவில் மண்ணியல் நிபுணராக இணைந்து பணியாற்றியவர். ஓய்வு நிலையிலும் அவரது குடும்பத்தவர்கள் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தபோதும் எமது பிரதேசத்திற்கு வந்து தனது அறிவினை பெற்ற அனுபவங்களை அனைவருக்கும் பகிர்ந்த மேன்மைக்குரியவர்.

விவசாயப் பீடத்தின் வருகை விரிவுரையாளராக பணியாற்றிய அமரர் ஜோசுவா அவர்கள் ஆய்வு மாணவர்களுக்கு நிலப்பயன்பாடு பற்றியும் மண்ணின் இயல்புகள் பற்றியும் விரிவுரையாற்றியதுடன் நீர் முகாமைத்துவம் தொடர்பான விரிவுரைகளையும் ஆற்றியுள்ளார். மேலும் ஆய்வு மாணவர்கள் இருவருக்கான மேற்பார்வையாளராகவும் ஆலோசகராகவும் பணிபுரிந்து வடமாகாணத்து மண்ணின் தன்மைகள் பற்றிய ஆய்வுக்கு ஆலோசனை வழங்கிய பெருமகனார். வறுமையில் தவித்த மாணவர்கள் சிலருக்கு பொருளாதார உதவியையும் வழங்கி அவர்களின் கல்விக்கு உறுதுணையாகவுமிருந்தவர்.

இவையனைத்துடன் இவருடைய அன்பான, அழகான குடும்பமும் பிள்ளைகள் மூவரும் பேரப்பிள்ளைகள் இருவரும் குடும்ப உறவுகளுடன் அன்னாரின் அமரத்துவத்தை சிறப்பித்த நாளில் ஏழாலை தெற்கில் விலூசிற்றியில் அமைந்துள்ள இலங்கை அமெரிக்க மிஷன் சர்ச்சில் அன்னவரின் பெருமையை எடுத்தியம்பிய வேண்டுதலில் அமைதியான அந்த உன்னத ஆத்மா சாந்தியடைந்ததை உறுதிசெய்தமை அவர் பிறந்த ஏழாலை மண்ணுக்கு மேலும் பெருமை சேர்த்ததுடன் அந் நிகழ்வின் போது இயற்கையும் மழை பொழிந்து அம்மண்ணை குளிர்வித்து தனது நல்லாசியையும் வழங்கியமை வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோருக்கு கிடைக்கும் கௌரவமாகும்.

அமரர் ஜோசுவா அவர்களின் வாழ்க்கை, அவர் வாழ்ந்த வரலாறு, அவரின் திறன்மிகு செயற்பாடுகள், அவர் சாதித்த புலமைச் சான்றுகள், ஆய்வுகளில் ஆளுமையில் சந்தித்த நெருக்கடிகள், அதில் துணிந்து நின்று தனது புலமையை வெளிக்காட்டிய திறமை என பலதும் எமது எதிர்கால சந்ததிக்கு நல்ல பாடமாகவும் வாழ்க்கைக்கான நல்வழிகாட்டிகளுமாகும். பிறந்தால், வளர்ந்தால், வாழ்ந்தால் தமது தனித்துவத்தை சஞ்சலமின்றி வெளிப்படுத்தும் வாண்மையும் அமரர் ஜோசுவா போல அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்போம்.

# உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த விற்பனை நிலையங்கள் தேவை-ஆளுநர்

**(யாழ்ப்பாணம்)**

**உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் யாழ். முயற்சியாளர் சங்கத்தால் நடத்தப்படும் "பஞ்சவர்ணம்" உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான புதிய விற்பனைக் கூடம் யாழில் நேற்று முன் தினம் வடக்கு மாகாண ஆளுநரினால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை சந்தைப்படுத்துவதில் பிரச்சினை இருக்கின்றது.

இந் நிலையில் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப்பொருட்களை பொதுவான இடத்தில் காட்சிப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வாய்ப்புக்களைக் கோரியிருந்தார்கள். தற்போது திறக்கப்பட்டுள்ள விற்பனைக்கூடம் தற்காலிகமானதாக இருந்தாலும் அது நிரந்தரமான கட்டடத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் அமைக்க முடியும் என நம்புகின்றேன்.

எமது சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரப்படுத்தல் அவசியம் எனக் கூறிய அவர் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இவ்வா றான விற்பனை நிலையங் கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத் தடைச்சட்டம்

# புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை அவதானத்துடன் கையாளப்படும்

## அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய பிமல்

**(கொழும்பு)**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் அரசாங்கத்தின் கொள்கை அல்லது விஞ்ஞாபனத்தின் ஒரு பகுதி அல்ல, ஆனால் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் வரை அது அவதானத்துடன் பயன்படுத்தப்படும் என அவைத் தலைவர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. எஸ். சிறீதரன் சம்பந்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் செய்தபோது குடிவரவு அதிகாரிகள் பயணத் தடையை காரணம் காட்டி தடை செய்யப்பட்டதாக ஹக்கீம் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்தகைய தடைக்கு நீதிமன்ற உத்தரவு தேவை என்றும் அது நடைமுறையில் இல்லை என்றும் ஹக்கீம் வாதிட்டார்.

குறித்த விடயத்துக்கு பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

அத்துடன் சிறீதரன் எம்.பி க்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துவதாக தெரிவித்த அவர், பாராளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். (நி-6)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி நினைவுப்பேருரை 2024
(முதலாவது தலைவர், யாழ்ப்பாண வளாகம், முன்னாள் பீடாதிபதி, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேருரைத் தலைப்பு :
"இனமரபு இசையியலாக தமிழிசை: சங்ககாலம் முதல் எங்கள் காலம் வரை"

பேருரை வழங்குனர் :
பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன்,
தகைசால் சமூகவியல் பேராசிரியர்,
முன்னாள் துணை வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி : 23.01.2025 (வியாழக்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்

(C-2102)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று மேலும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுதியானது நேற்று முறையே 292.83 ரூபாவாகவும் 301.33 ரூபாவாகவும் காணப்படுகிறது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 292.29 ரூபாவாகவும் 300.81 ரூபாவாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## LOLC பைனான்ஸினால் பிரெய்லியுடன் இணைக்கப்பட்ட கிரடிற் காா்ட் அறிமுகம்

LOLC பைனான்ஸ் இலங்கையில் முதன்முறையாக பார்வையற்றவர்களும் பயன்பெறும் வகையில் பிரெய்லி உடன் இணைக்கப்பட்ட மாஸ்ரா் காா்ட், கிரடிற் காட் என்பவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரெய்லியுடன் இணைக்கப்பட்ட கிரடிற் காட் பல்ஸ், கோல்ட், பிளாட்டினம், வோல்ட் மற்றும் பெண்களை மையமாகக் கொண்ட Swairee காா்ட்டுடன் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

பிரெய்லியுடனான மேற்குறித்த சேவைகள் பார்வையிழந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியர்களும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5' 9"
தகைமை/தொழில்: Degree, Company (pvt)(Australia)
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர், தகுதியான பெண்
தொ.இ: B/15086

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: பூரம் 8 இல் செவ்
உயரம்:5' 7"
தகைமை/தொழில்:படவரைஞர்
எதிர்பார்ப்பு- தகுதியான பெண்
தொ.இ: B/15087

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்: பரணி
கிபா-20 6 இல் சூரி செவ்
உயரம்:5' 9"
தகைமை/தொழில்: BSc, QS
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்,கனடா (PR)
தொ.இ: B/15088

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1998- இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 49
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: BBA,Accounting Associate(pvt)
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம், பட்டதாரி
தொ.இ: G/14948

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 14 1/2
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BSc, Researcher (NGO)
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/12936

பிறப்பு-1994- இந்து
நட்சத்திரம்:புனா்பூசம்
கிபா-14 ½ 5 இல் சூரி செவ்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: Bsc, Computer Engineer(Canada)
எதிர்பார்ப்பு-வெளிநாடு (கனடா)
தொ.இ: G/14952

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

மணிவிழா வாழ்த்து



திரு.
அரசரத்தினம் அரசகுலசேகரன்
B.A., PG.Dip.in.Edu.S.L.T.S - I, Primary English

சேவைவிபரம்
- வ/வவுனியா வடக்கு வேலங்குளம் அ.த.க.பாடசாலை (07.01.2003 - 26.01.2004)
- வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம் (27.01.2004 - 06.07.2005)
- யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் (07.07.2005 - 23.02.2014)
- யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலை யா/நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலை (24.02.2014 - 21.01.2025)

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி 22.01.2025 இன்று ஓய்வுபெறும் ஆசிரியரை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம். (3085)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# துருக்கி ஹோட்டலில் தீ விபத்து!

## 10 பேர் உயிரிழப்பு 32 பேர் காயம்




(துருக்கி)

துருக்கியில் அமைந் துள்ள ஸ்கை ரிசார்ட் ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 10 பேர் உயிரிழந்ததுடன், 32 பேர் காயமடைந்துள்ளனர்.

நாட்டின் வடமேற்கில் உள்ள கர்தல்காயாவில் அமைந்துள்ள ஹோட் டலின் உணவகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இரவு தீ விபத்து ஏற்பட்டதாக துருக்கி உள் துறை அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்தார்.

ஹோட்டலின் கூரை மற்றும் மேல் தளங்கள் தீப்பற்றி எரிவதை காட்டும் காட்சிகள் சமூக ஊடகங் களில் வெளியாகியுள் ளன.

தீ விபத்துக்கான கார ணம் உடனடியாக தெரிய வில்லை. ஹோட்டலின் வெளிப்புறத்தில் உள்ள மரப்பலகைகள் தீ பர வுவதை துரிதப்படுத்தி யிருக்கலாம் என்று அதி காரிகள் கூறியுள்ளனர்.



எவ்வாறெனினும், தீ விபத்தை அடுத்து சம்பவ இடத்திற்கு 30 தீய ணைப்பு வாகனங்கள் மற் றும் 28 அம்புலன்ஸ்கள் அனுப்பப்பட்டதாக ஆளு நர் அலுவலகம் தெரிவித் தது. கர்தல்காயா என்பது இஸ்தான்புல்லுக்கு கிழக்கே 300 கிலோ மீற் றர் தொலைவில் உள்ள கோரோக்லு மலைகளில் உள்ள ஒரு பிரபலமான ஸ்கை ரிசார்ட் ஆகும் என் பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# 47 ஆவது ஜ

# பதவியேற்ற

➤ பதவியேற்ற முதல் நாளிே

➤ உலகின் கவனத்தை ஈர்க்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 47 ஆவது ஜ டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன் பிரமாணம் செய்து கொண்ட பின் உரையில் அதிரடியான அறிவிப் கின் கவனத்தை தன் பக்கம் திரு

### உலக சுகாதார அமைப்பி வெளியேறும் அமெரிக்க

உலக சுகாதார அமைப்பி லிருந்து அமெரிக்கா விலகும் உத்தரவில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ட்ரம்ப் கையெ முத்திட்டுள்ளார்.

கொரோனா தொற்று நோய் மற்றும் பிற சர்வதேச சுகாதார நெருக்கடிகளை உலக சுகாதார அமைப்பு த டுள்ளதாக ட் ளார். இதுமே களால் ஐ.ந பில் இருந் அதற்கான யையும் நிற தெரிவித்தார்

### ஆண்-பெண் என்ற பாலின மட்டுமே அங்கீகரிக்கப்படும்

அமெரிக்காவில் ஆண்- பெண் என்ற இரு பாலினம் மட்டுமே இனி அங்கீகரிக்கப் படும்என அந் நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

"சிறார் பாலின மாற்று அறுவை சிகிச்சைக்குத் தடை விதிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அத்து டன் இரானு பாலினத்த பதற்குத் த னித்துள்ளத இது தொடர் கையை மு டொனால்ட் உரையில்

# கொல்கத்தா வைத்தியர் கொலை வழக்கு

# குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

(டில்லி)

கடந்த ஆண்டு கொல்கத் தாவின் ஆர்.ஜி.கார் வைத் தியசாலையில் பயிற்சி வைத்தியரை துஷ்பிரயோ கம் செய்து கொலை செய்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப் பட்ட சஞ்சய் ராய்க்கு ஆயுள் தண்டனையும், 50,000 இந்திய ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்க ளன்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதேநேரம், பாதிக்கப் பட்ட பெண்ணின் குடும்பத் திற்கு மாநில அரசு 17 இலட் சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

எனினும், பாதிக்கப்பட் டவரின் குடும்பத்தினர் இழப் பீட்டுத் தொகையை ஏற்க மறுத்துவிட்டனர்.

2024 ஓகஸ்ட் 9 அன்று அதிகாலையில் வைத்திய சாலையில் உள்ள கருத் தரங்கு கூடத்தில் முது கலை மருத்துவப் பயிற்சி பெற்ற பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

அவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பின்னர் கொல் லப்பட்டிருந்தார்.

இக்குற்றம் தொடர்பாக சஞ்சய் ராய் என்ற நபர் மறுநாள் கைது செய்யப் பட்டார்.

கொல்கத்தா பொலி ஸார், உயிரிழந்தவரின் உடல் அருகே கண்டெடுக் கப்பட்ட புளூடூத் இயர் போன் மூலம் சஞ்சய் ராயை அடையாளம் கண்டனர்.

ராய் தனது கழுத்தில் புளூடூத் இயர்போன் கரு வியுடன் கருத்தரங்கு மண்டபத்திற்குள் நுழை வது சிசிரிவி காட்சிகளில் காணப்பட்டது.

இந்தச் சம்பவம் நாடு தழுவிய அளவில் கண்ட னத்துக்கும், மக்களின் கொந்தளிப்புக்கும் வழி வகுத்தது. (நி-6)

### பதவிக

### நெருக்

(ஜெருசலேம்) இஸ்ரேல் - இடையே ஒரு ஒப்பந்தம் கை யுள்ள சூழலி எதிர்ப்பு தெரிவி யாகு அமைச் இருந்து 3 அ பதவி விலகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியாக

# றார் ட்ரம்ப்

## ளிலே அதிரடி அறிவிப்புகள்!

## ர்க்கும் ட்ரம்ப்!



வது ஜனாதிபதியாக
று முன்தினம் பதவிப்
ண்ட பின் தனது முதல்
அறிவிப்புகளால் உல
கம் திருப்பியுள்ளார்.

### அமைப்பிலிருந்து
### மெரிக்கா

அமைப்பு தவறாக கையாண் டுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள் ளார். இதுபோன்ற காரணங் களால் ஐ.நா.சுகாதார அமைப் பில் இருந்து விலகுவதுடன் அதற்கான நிதிப் பங்களிப் பையும் நிறுத்துவதாக ட்ரம்ப் தெரிவித்தார்.

### பாலினம்
### கப்படும்

டன் இராணுவத்திலும் மாற்றுப் பாலினத்தவர்களை இணைப் பதற்குத் தடை விதிக்கத் தீர்மா னித்துள்ளதாகவும் விரைவில் இது தொடர்பான உத்தரவுகளில் கையெ முத்திடவுள்ளதாகவும் டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் உரையில் தெரிவித்துள்ளார்.

### பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுகிறது

பாரிஸ் காலநிலை ஒப்பந் தத்தில் இருந்து அமெரிக்கா விலக்கிக் கொள்வதாகவும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உலகில் அதிகளவு கார்பன் மாசு ஏற்படுத்தும் நாடான அமெ ரிக்கா காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகும் முடிவு செய் துள்ளது. புவி வெப்பமயமா தலை எதிர்த்து போரிடும் உலகளாவிய முயற் சிகளுக்கு பின்னடைவை ஏற்ப டுத்தும் என்றும் அமெரிக் காவை அதன் நெருங்கிய கூட் டாளி களிடம் இருந்து விலகை செய் யும் என்று கூறப்படுகிறது.

### சட்டவிரோதமாக குடியேறியவர்கள் வெளியேற்றப்படுவார்கள்

அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறி இருப் பவர்கள் அனைவரும் உடன டியாக வெளியேற்றப்படுவார் கள் என டொனால்ட் ட்ரம்ப் அறிவித் துள்ளார்.

அத்துடன் சட்டவிரோத குடியேற்றத்தை முற்றிலு மாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் உறுதியளித்தார். (நி)

## மரதன் ஓட்டப் போட்டியில் மனிதர்கள்- ரோபோக்கள்

### தயாராகிறது சீனா

(பீஜிங்)

மனிதர்களும் ரோபோ வீரர்களும் பங்கேற்கும் மரதன் ஓட்டப்போட்டியை நடத்த சீனா தயாராகி வருகிறது. இந்தப் போட்டி தலைநகர் பீஜிங்கில் நடை பெற உள்ளது.

மக்கள்தொகை சவால் களை எதிர்கொண்டுள்ள நேரத்தில் சீனா, இந்த முயற்சியை எடுத்துள் ளது.

பீஜிங்கின் டாக்சிங் மாவட்டத்தில் ஏப்ரல் மாதம் திட்டமிடப்பட்டுள்ள அரை மரதன் ஓட்டப் போட்டியில் (21 கிமீ) 12,000 விளை யாட்டு வீரர்களுடன் பல ரோபோக்கள் போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (நி-6)



## ‘நிம்மதியாக உறங்கினோம்’

### யுத்தமற்ற இரவு குறித்து காசா மக்கள்

(காசா)

2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி யுத்தம் ஆரம்பித்த பின்னர் முதல்தடவையாக நிம்மதியாக உறங்கிய தாகத் தெரிவித்துள்ள காசா மக்கள் தங்களால் இதனை நம்ப முடியாமல் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ள னர்.

நாங்கள் கண்விழித் ததும் எனது அயலில் உள்ள சிறுவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டிருந் தார்கள்.

யுத்தத்திற்கு முன்னர் போல சிறிய உணவு பண் டங்களை விற்பவர்களை நாங்கள் பார்த்தோம் மீண் டும் பிறந்தது போல இருந்தது என அவர்கள் தெரி வித்தனர். (நி-6)



## போர் நிறுத்த எதிரொலி

## பதவியை தூக்கி எறிந்த அமைச்சர்கள்

### நெருக்கடியில் நெதன்யாகு

(ஜெருசலேம்)

இஸ்ரேல்- ஹமாஸ் இடையே ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ள சூழலில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நெதன் யாகு அமைச்சரவையில் இருந்து 3 அமைச்சர்கள் பதவி விலகல் செய்துள்ள னர். இஸ்ரேல்- ஹமாஸ் இடையே கடந்த 2023 ஆம் ஆண்டு போர் தொடங் கியதிலிருந்து அப்போது இஸ்ரேல் நாட்டில் நுழைந்த ஹமாஸ் படை சரமாரியா கத் தாக்குதலை நடத்தியது.

அன்றிலிருந்து மத்திய கிழக்கில் தொடர் தாக் குதல்கள் ஆரம்பமானது டன் இதுவே இந்தப் போரின் தொடக்கமாக அமைந்தது.

மேலும் அன்றிலிருந்து ஹமாஸ் அமைப்பு மீது இஸ்ரேல் தொடர் தாக்கு தல்களை மேற்கொண்டு சூறையாடியது.

இவ்வாறான பின்னணி யில் கடந்த சில மாதங்க ளுக்கு முன் இஸ்ரேல் நடத்திய அதிரடித் தாக்கு தலில் ஹமாஸ் தலைவர் சின்வார் கொல்லப்பட்டார்.

கட்டடம் ஒன்றில் பதுங்கி இருந்த சின்வாரை இஸ் ரேல் கொன்றது. இது மட்டு மின்றி ஹமாஸ் படையின் பல மேஜர் தலைவர்களை யும் கூட இஸ்ரேல் குறி வைத்து கொன்றது.

ஹமாஸ் தலைவர் உட்பட பலரும் கொல்லப்பட்டதால் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற குரல்கள் சர்வதேச ரீதியில் அதிகம் எழுந்தன.

இதற்காக இரு தரப்பிற்கும் இடையே எகிப்து, கட்டார், அமெரிக்கா ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்து போர் நிறுத்த ஒப் பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந் நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலின் தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் இடாமர் பென்க்விர் பதவி விலகியுள்ளார். மேலும், தற்போது இஸ் ரேலில் அமைந் துள்ள கூட்டணி அரசில் இடாமரின் ஓட்ஸ்ம் யெஹூடிட் அங்கம் வகித்து வந்த நிலையில், அந்த கூட்ட ணியில் இருந்தும் விலகுவதாக அறிவித் துள்ளார். இதனால் மேலும் இரு அமைச் சர்களும் பதவி விலகியுள்ளதாக தகவல்கள் எழுந்துள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசூரினாவில் சுற்றுலா மைய மண்டபம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலா மையத்திற்கான உட்கட்டு மான வசதிகள் கொண்ட மண்டபம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

காரைநகர் பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கடற் றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மண்ட பத்தைத் திறந்து வைத்தார்.

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச் சினால் குறித்த மண்டபம் நிர்மா ணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6-33)

## பேராசிரியர் கைலாசபதியின் நினைவுரை

(யாழ்ப்பாணம்)

"இனமரபு இசையியலாக தமி ழிசை: சங்காலம் முதல் எங்கள் காலம் வரை" எனும் தொனிப் பொருளில் யாழ்.பல்கலைக்கழகத் தின் முன்னாள் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கனகசபாபதி கைலா சபதியின் நினைவுரை நிகழ்வு நாளை வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-6)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 350 | 300-350 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 100 | 800-850 | 900 |
| தக்காளி | 350 | 350 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 250 | 150 | 200 |
| கரட் | 200 | 300 | 300 | 400 |
| பூசணி | 100 | 150 | 80-90 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 150-350 | 600 |
| பெரிய வெங்காயம் | 350 | 250 | 250 | 280 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 300-550 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 100 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 550 | 500 |
| லீக்ஸ் | 300 | 300 | 350-400 | 400 |
| பீற்றூட் | 500 | 400 | 400 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 550 | 600 |
| முருங்கைக்காய் | -- | 1200 | 800 | 1600 |
| போஞ்சி | 350 | 400 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 250 | 250 |
| கீரை – 1 பிடி | 140 | 150 | 50-80 | 200 |
| தேசிக்காய் | 200 | 200 | 200-250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150-200 | 150-200 | 180-240 |
| இராசவள்ளி | 450 | 450 | 500-600 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 450 | 400 | 600 |
| முள்ளங்கி | 180 | 200 | 120-150 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 160 |

## இன்று ஒரு தகவல் 305



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தானம்

இராமாயணத்தை சம்பந்தப்படுத்தி எத்தனையோ பழங்கதைகள் உண்டு. அதிலேயும் சில நயங்கள், கருத்துக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒரு கதை இது.

இலங்கையிலே எல்லாம் முடிந்து ராமர் இலங்கையை விபீஷனனுக்குத் தானமாகக் கொடுத்தார். அவனுக்கு மகுடம் சூட்டுகின்றார். பட்டாபிஷேகம் முடிந்தது. அதன்பின் அங்கே என்ன வேலை? எல்லோரும் அயோத்திக்குப் புறப்பட்டார்கள். பயண ஏற்பாடுகள் எல்லாம் மிகவும் மும்மரமாக நடந்து கொண்டிருந்தது.

அப்போது தான் சீதைக்கு அந்த அம்மிக்கல்லினுடைய ஞாபகம் வந்துவிட்டது. அதாவது வேறே ஒன்றுமில்லை. அங்கே ஒரு அபூர்வமான அம்மிக்கல் இருந்தது. அதுலே ஒரு விசேஷம் என்னவென்றால் அதிலே ஒரு பொருளை வைத்து அரைத்தால் அந்தப் பொருளின் இயற்கையான வாசனை அதிகரிக்குமாம். அந்தப் பொருளினுடைய தரமும் குணமும் கூடும். ஆரம்பத்திலே திரிசடை சொன்ன போதே சீதை மனதிலே ஒரு சின்ன ஆசை! அயோத்திக்குப் போகும் போது இதை எப்படியாவது எடுத்துக் கொண்டு போக வேண்டும்.

இப்போது அதற்கான நேரம் வந்துவிட்டது. என்ன செய்வது புதுவிதமான ஒரு பொருளை பார்த்துவிட்டால் எல்லாப் பெண்களுக்குமே இயற்கையாக வரக்கூடிய ஒரு ஆசைதான் இது.

இப்போது அதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை செய்கிறார்கள். உடனே அனுமன் தான் இதற்குப் பொருத்தம் என்று தோன்றியது.உடனே அனுமனைக் கூப்பிட்டு அந்த அம்மிக்கல்லைக் காட்டி, இதோ பார் இந்த அம்மிக்கல்லை நீ எப்படியாவது அயோத்திக்கு கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டும் என்றார்.

சஞ்சீவி மலையையே பேர்த்து எடுத்து வந்த அனுமனுக்கு இது ஒரு பெரிய வேலையா! உடனே அம்மிக்கல் இருக்கும் இடத்திற்கு ஓடினார். சீதை சொன்னார் சஞ்சீவி பர்வதத்தை எடுக்கின்றபோது காட்டிய உன்னுடைய முரட்டுத் தனத்தை இந்தச் சின்ன அம்மிக்கல்லிடம் காட்டினால் அது சுக்கு நூறாக உடைந்து விடும். அதனாலே மிகவும் ஜாக்கிரதையாக மெதுவாக அதை எடுக்க வேண்டும் என்று எச்சரிக்கை கொடுத்தார். அனுமன் சரி என்று சொல்லிவிட்டு தரையிலே பதித்திருந்த அந்த அம்மியை எடுப்பதற்கு மெதுவாக கொத்த ஆரம்பித்தார்.

அந்த சமயத்திலே அந்தப் பக்கமாக ஒரு ஜாம்பவான் வந்தார். என்னப்பா இது கிளம்பும் நேரத்தில் நீ இந்தக் கல்லைப் பேர்த்துக்கொண்டிருக்கிறாய் என்றார்.இது சீதாபிராட்டியாரின் ஆணை என்றார் ஆஞ்சநேயர். அவரா இப்படி ஆணையிட்டார் என்று கேட்டுக் கொண்டே சீதையிடம் போய் அப்படியா என்று கேட்டார். ஆமாம் இது ஒரு அதியசயமான அம்மி திரிசடை தான் சொன்னாள். அது தான் அதை எடுக்கும் படியாக அனுமனிடம் சொன்னேன். அதில் என்ன தவறு என்றார்.

ஜாம்பவான் சொன்னார். தங்களுடைய கணவர் இலங்கையை விபீஷணனுக்குத் தானமாக கொடுத்துவிட்டார். தானமாக ஒரு பொருளை ஒருவரிடம் கொடுத்தால் மறுபடியும் அதிலிருந்து எதையும் வாங்கக் கூடாது. தானம் வாங்குபவரே தருகின்றேன் என்று சொன்னாலும் அதை வாங்கக் கூடாது. அப்படி வாங்கி விட்டால் தானம் செய்வதிலே வருகின்ற புண்ணியம் போய்விடும்.

ராமபிரான் பெற்ற அப்பேர்பட்ட ஒரு பெரிய புண்ணியம் இந்த அற்பமான கல்லாலே கெட்டுப் போக வேண்டாமே என்று நினைத்துத் தான் பயப்படுகின்றேன் என்று சொன்னார் ஜாம்பவான்.

சரியான நேரத்திலே உண்மையைச் சொல்லிப் பாவச்செயலிலே இருந்து என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். எங்கள் புண்ணியம் உங்களாலே காப்பாற்றப்பட்டது.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அது எவ்வளவு உண்மை என்று உங்கள் மூலம் தெரிந்து கொண்டேன் என்று சொல்லி அனுமன் சிரித்தார். நீ சொல்லின் செல்வன் என்பதை நிரூபித்துவிட்டாய் ஜாம்பாவான்.இப்படி ஒரு பழங்கதை இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன வென்றால்?தானம் கொடுப்பதை திருப்பி வாங்குவது தவறு. அதே மாதிரி நமக்கு தானமாக வந்ததை நாம் தரம் பார்த்துக் கொண்டிருப்பதும் தவறு.

ஒரு பசு மாட்டை நமக்கு ஒருவர் தானமாக கொடுத்தால் கொடுத்தவரே இது எவ்வளவு பாலைக் கறக்கும் மாலையிலே எவ்வளவு பாலைக் கறக்கும் என்று கேட்கக்கூடாது.தானம் குடுத்த மாட்டை பல்லை பிடித்து பார்க்காதே என்று ஒரு பழமொழி இருக்கு அதற்கு என்ன அர்த்தம்? தானமாக வந்த மாட்டை பல்லைப் பார்த்து சோதிக்கக்கூடாது என்று அர்த்தம். அப்படி சோதித்தால் அதைக் கொடுத்தவர்களுக்கு மரியாதை இல்லை.


நம் ஆள் ஒருவர் ஒரு பசு மாட்டை ஒருவரிடம் தானமாகக் கொடுத்து அனுப்பி விட்டார். அதுக்கு பிறகு பல்லைப் பிடித்து பார்த்தாலும் நான் ஒன்றும் கவலைப்படமாட்டேன். பல் எல்லாம் போன பின் தான் நான் அந்த மாட்டை தானம் செய்து இருக்கின்றேன். அது இனி எதற்கும் உபயோகப்பட மாட்டாது சார். அப்படி என்றார் மிகவும் சாவகாசமா!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாவற்குளத்தின் வான்கதவுகள் திறப்பு; இடைநிறுத்தப்பட்ட போக்குவரத்துக்கள்

(குருமன்காடு)

**வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக வவுனியா-சேத்துகுளம் மதவாச்சி வழியான வீதி, நெளுக்குளம் மற்றும் நேரியகுளம் வீதி, பூவரசன்குளம் மற்றும் சேறிடிகுளம் வீதி மற்றும் செட்டிக்குளம் மற்றும் நெலியன்மோட்டை ஆகிய 4 வீதிகளுடனான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.**



வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவதன் காரணமாக பல குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற் குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக நான்கு வான்கதவுகளும் திறக்கப்பட் டுள்ளன.

குறித்த வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப் பட்டதாக அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவ குளம், பாவற் குளம் படிவம் 5.6.4.2.1, பீடியாபாமின் வேப்பங் குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.(நி-6-250)

## தண்ணிமுறிப்பு, ஆண்டான்குள மக்கள் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(நெளுக்குளம்)

ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் முல்லைத்தீவு பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராம மக்களை மீள்குடியேற்றுவதற்கு புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியு றுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறுவதற்குத் தயாராக உள்ளனர்.


கடந்த 1984 ஆம் ஆண்டு அப்பகுதிகளிலிருந்த மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தனர். இருப்பினும் அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் தம்மை தமது சொந் தக் கிராமங்களில் மீள்குடி யேறவிடாமல் தடுத்து வைத்துக் கொண்டு, தமது பூர்வீக கிராமங்களில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றதா என அப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே புதிய அரசாங்கமாவது தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராம மக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி அவர்களை மீள்குடியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (நி-6-299)

## மதவாச்சி பகுதியில் பாரவூர்திகள் விபத்து

### இருவர் காயம்



(வவுனியா)

ஏ-9 வீதி மதவாச்சி, கஞுகந்தே பகுதியில் நேற்று மூன்று பாரவூர்திகள் தரித்து நின்ற போது கொழும்பில் இருந்து பயணித்த பாரவூர்தி ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது இருவர் காயமடைந்ததுடன், பாரவூர்திகளும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)

## 5S தரச்சான்றிதழினை பெற்ற கிளிநொச்சி மாவட்ட செயலகம்



(தருமபுரம்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 5S தரச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று தேசிய உற்பத்தி திறன் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 5S தரச் சான்றிதழினை கிளிநொச்சி மாவட்ட செயலகம் பெற்றுக் கொண்டது.

கடந்த வருடம் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் நடத்தும் உற்பத்தி திறன் கருவிகளில் ஒன்றான 5S சான்றிதழ் திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகம் விண்ணப்பித்திருந்தது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை மேற்பார்வை மதிப்பீட்டு குழுவினர் கண்காணித்திருந்தனர். இந்நிலையில் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தில் இதற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் 5S தரச் சான்றிதழினை இவ்வாறு பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-[illegible])

## இலங்கை பிரஜை அந்தஸ்தை பெற்ற மியன்மார் குழந்தை

(நெளுக்குளம்)

மியன்மாரில் இருந்து இலங்கைக்கு தஞ்சம் கோரி வந்த கர்ப்பிணித்தாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குழந்தையை பிரசவித்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு கரை ஒதுங்கியிருந்தது.

இதனையடுத்து கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை கடற்படை தளத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் திருகோணமலை ஜமாலிய முஸ்லீம் மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டு பின்னர் 115 பேரும் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படை தளம் ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த படகில் 45 சிறுவர்கள், 24 பெண்கள், 46 ஆண்கள் உள்ளடங்கலாக 115 பேர் இருந்தனர். அவர்களில் ஒரு கர்ப்பிணித் தாயும் அடங்குவர்.

இந்நிலையில் குறித்த கர்ப்பிணித்தாய் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஆண் குழந்தையை பிரசவித்துள்ளார். (நி-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் பாகம் - 3

686





அந்த ஓடக்காரப் பெண் கடலில் தனியாகப் படகு செலுத்திக்கொண்டு போக எவ்வளவு நெஞ்சுத் துணிவு உள்ளவளாயிருக்க வேண்டும்? புயலிலும், மழையிலும் மலை போன்ற அலைகளுக்கு மத்தியில் படகு விட்டுக் கொண்டு போய் இளவரசரைக் காப்பாற்றியதற்கு எவ்வளவு நெஞ்சுத் துணிவு அவளுக்கு இருக்க வேண்டும்? தான் இந்த சிறிய பிரயாணத்தைக் குறித்துப் பயப்படுவது எவ்வளவு பேதமை? சூடாமணி விஹாரத்துக்குள் உடனே போக முடியாவிட்டால் பாதகமில்லை. அக்கம் பக்கத்தில் இருந்து இளவரசரைப் பற்றிய செய்தி தெரிந்து கொண்டிருந்தாலும் போதும். இளவரசரைப் பார்க்க முடியாவிட்டாலும் பாதகமில்லை அந்த ஓடக்காரப் பெண்ணையாவது பார்க்க முடிந்தால் போதும். ஆம், அதுதான் சரி, அவளை எப்படியாவது தெரிந்து கொண்டால், அவள் மூலமாக இளவரசரைப் பார்க்க முடிந்தாலும் முடியலாம்.

அவரிடம் தனக்குள்ள அன்பு ஏதோ ஒரு பிரயோஜனத்தை காட்டிவிட வேண்டும். அதற்குப் பிறகு இந்த உயிரை விட்டாலும் விட்டுவிட்டலாம். அல்லது புத்த சங்கத்தில் சேர்ந்து பிக்குணி ஆனாலும் ஆகிவிடலாம்.

மறுநாள் எந்த நேரத்துக்கு நாகைப்பட்டினம் போய்ச் சேரலாம் என்று பல்லக்குச் சுமப்பவர்களை விசாரிப்பதற்காக வானதி பல்லக்கின் திரையை விலக்கி வெளியில் பார்த்தாள். சாலை ஓரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த மரங்களுக்குப் பின்னால் சில உருவங்கள் மறைந்து நிற்பது போல் அவளுக்குத் தோன்றியது. இன்னும் சிறிது கவனமாக உற்றுப் பார்த்தாள். மறைந்து நின்றவர்கள் வீர சைவ காலாமுகர்கள் என்று தெரிந்தது. இதைக் குறித்து வானதிக்குச் சிறிதும் கவலை உண்டாகவில்லை. அவள் கொடும்பாளூர் அரண்மனையில் வளர்ந்த காலத்தில் அடிக்கடி காலாமுகர்கள் அங்கே வருவதுண்டு. அவளுடைய பெரிய தந்தையிடம் பேசி, தங்களுக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றுப் போவதுண்டு.

காலாமுகர்களின் பெரிய குருவே ஒரு சமயம் கொடும்பாளூர் வந்திருக்கிறார். அவருக்கு உபசாரங்கள், பூஜைகள் எல்லாம் நடந்தன. அவளுடைய பெரிய தகப்பனார் பூதி விக்கிரம கேசரி பல திருக்கோயில்களில் காலாமுகர்களுக்கு அன்னம் படைப்பதற்கென்று நிவந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் காலாமுகர்கள் தனக்குக் கெடுதல் ஒன்றும் செய்ய மாட்டார்கள்.

ஒருவேளை உதவி செய்தாலும் செய்வார்கள். இன்றைக்கு அவர்களுடைய மகாசங்கம் கூடுகிறதென்பதும் வானதிக்குத் தெரிந்திருந்தது. ஆகையால் அன்று பழையாறையிலிருந்து குடந்தைக்கு வந்த போது கூடச் சாலையில் காலாமுகர் கூட்டங்களை அவள் பார்க்கும்படி நேர்ந்தது. ஆனாலும், இவர்கள் எதற்காக மரத்தின் பின்னால் ஒளிந்து நிற்கிறார்கள்? தன்னை ஒருவேளை வேறு யாரோ என்று அவர்கள் எண்ணிக் கொண்டு ஏதாவது தீங்கு செய்யலாம் அல்லவா?

இப்படி அவள் எண்ணிக் கொண்டிருந்தபோதே, மறைந்திருந்தவர்கள் திடுதிடு வென்று ஓடி வந்தார்கள். பல்லக்கைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்போதும் அவள் பயப்படவில்லை. தான் யார் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க எண்ணினாள்.

எப்படி அதைச் சொல்வது என்று யோசிப்பதற்குள், பல்லக்குடன் வந்த பணிப்பெண்ணை இரண்டு பேர் பிடித்து மரத்தோடு கட்டுவதைப் பார்த்தாள். உடனே அவளையறியாமல் பீதியுடன் கூடிய கூச்சல் ஒன்று அவள் வாயிலிருந்து வந்தது.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## நேர்மை



ஒரு பெரிய நகரத்தில் உமா என்கிற பெண் குழந்தை வாழ்ந்து வந்தாள். உமாவின் அம்மா அப்பா இருவரும் அந்த நகரத்திலேயே வேலை செய்து வந்தார்கள். உமாவின் பெற்றோர் அவளின் மீது மிகவும் பாசம் வைத்திருந்தார்கள். அதனால் உமா என்ன ஆசைபடுகிறாளோ அதை அவளுக்கு வாங்கிக் கொடுத்தார்கள்.

அவர்கள் எப்போதெல்லாம் சந்தைக்கு போகிறார்களோ அப்போதெல்லாம் அவளுக்கு பரிசுகள் வாங்கிக் கொண்டு வருவார்கள். அவள் தன் பெற்றோர்களிடம் ரொம்ப செல்லமாக வாழ்ந்து வந்தாள். உமா மிகவும் புத்திசாலி. அவள் படிப்பிலும் சிறந்து விளங்கினாள். அதுமட்டுமில்லாமல் எப்போதும் மற்றவர்களுக் கும் உதவி செய்யும் குணம் உடையவள்.

ஒரு நாள் உமா பாடசாலைக்கு செல்லும் போது தன் வகுப்பிற்கு வெளியில் கூட்டமாக பிள்ளைகள் இருப்பதை பார்த்தாள். அங்கே என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ள உமா ஆசைப்பட்டாள். அவளும் அந்தக் கூட்டத்தின் அருகில் வந்து பார்த்த போது எல்லோரும் உமாவின் தோழியான ஜோதியின் புதுப் பேனாவை ரசித்துக் கொண்டிருந்தார்கள். உமாவும் அந்தப் பேனாவைப் பார்க்கிறாள். அவளுக்கு அந்த பேனா மிகவும் பிடித்தது.

அவள் ஜோதியிடம் ஒரு முறை அந்தப் பேனாவை கேட்டு வாங்கி தன்னுடைய புத்தகத்தில் எழுதிப்பார்த்தாள். அந்த நேரம் ஸ்கூல் பெல் அடித்தது. உடனே எல்லா பிள்ளைகளும் காலை பிரார்த்தனைக்காக பாடசாலை மைதானத்திற்கு சென்றார்கள்.

அந்த நேரத்தில் ஆசிரியர் உமாவை கொஞ்சம் சாக்பீஸ் கொண்டு வரச் சொன்னார். அப்போது உமா வகுப்பிற்கு சென்றாள். அவளால் ஜோதியின் பென்னை பாக்காமல் இருக்க முடியவில்லை. இன்னொரு முறை அந்தப் பென்னை ஜோதியினுடைய பையிலிருந்து எடுத்துப் பார்த்தாள்.

அவள் அந்தப் பென்னை எப்படியாவது தனதாக்கிக் கொள்ள நினைத்தாள். அப்போது அந்த வழியாக யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது, அந்த அவசரத்தில் பேனாவை அவள் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு யாரென்று பார்த்தாள். அது அவளது மற்றோரு தோழியான தீபா. அவளுக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் அவளால் பிரார்த்தனைக்குப் போக முடியாமல் வகுப்பிற்கு திரும்ப வந்தாள்.

உமா உடனே அங்கிருந்து ஓடிப் பிரார்த்தனைக்கு சென்றாள். ஆனால் அந்தப் பேனா அவள் பாக்கெட்டில் தான் இருந்தது. பிரார்த்தனை முடிந்ததும் உமா உட்பட எல்லோரும் வகுப்பிற்கு போனார்கள். ஜோதி தன்னுடைய பேனாவை காணவில்லை என்பதை உணர்ந்து ஆசிரியரிடம் புகார் செய்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எண்ணிய முடிதல் வேண்டும் நல்லதே எண்ண வேண்டும்.

– பாரதியார்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# எங்கள் ஈழத் தமிழர்களின் உயிர் மூச்சு யாழ்ப்பாணம்

இந்திய மத்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கலாசார நிலையத்துக்குச் சூட்டப்பட்ட பெயர் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம் என்பதாக அதன் பெயர் ஏலவே குறித்துரைக்கப்பட்டது.

குறித்த கலாசார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களில் யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம் என்றே பிரசுரிக்கப்பட்டிருந்தது.

எனினும் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்துக்கு திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் சூட்டப்பட்டதாக கடந்த 18 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இங்குதான் முரண்பாட்டு நிலை ஏற்படுகிறது. அதாவது யாழ்ப்பாணத்து மக்கள் திருவள்ளுவரையும் திருக்குறளையும் போற்றி வழிபடுபவர்கள்.

தமிழ் மறைக் கழகம் என்ற அமைப்பை பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் ஆரம்பித்து திருக்குறள் மாநாடுகளை நடத்தியவர்.

சுருங்கக்கூறின் தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் வள்ளுவர் கோட்டத்தை அமைப்பதற்கு முன்னதாகவே, பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் திருக்குறளுக்கு விழா எடுத்து வள்ளுவரை – திருக்குறளை ஈழதேசம் எங்கும் பரப்பினார்.

இப்போதுகூட, மாவிட்டபுரத்து மண்ணில் திருக்குறள் வளாகம் எனும் உயரிய பீடத்தை கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் அமைத்து வருகிறார்.

1330 திருக்குறள்களையும் கருங்கல்லில் உளிகொண்டு செதுக்கி, அதனை ஆவணப்படுத்துகின்ற அப்பெரும் கைங்கரியம் அங்கு நடைபெற்று வருகிறது.

ஆக, திருவள்ளுவரையும் திருக்குறளையும் எம் மக்கள் உன்னதமாகப் போற்றுபவர்கள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

எனினும் யாழ்ப்பாணத்து மண்ணில் இந்திய மத்திய அரசினால் அமைக்கப்பட்ட கலாசார நிலையத்துக்கு **யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம்** எனப் பெயர் சூட்டப்பட்டபோது; அது ஈழத் தமிழ் மக்களுக்கு மகிழ்வையும் பெருமையையும் சிறப்பையும் தருவதாக உண ரப்பட்டது.

ஆம், யாழ்ப்பாணம் என்பது வெறுமனே யாழ்ப்பாணம் என்ற ஊரைக் குறிப்பதல்ல. மாறாக அது ஈழத் தமிழ் மக்களை – ஈழ தேசத்தை – ஈழத் தமிழர்களின் இராச்சியத்தைக் குறிப்பதாகும்.

இதையும் கடந்து, ஆயகலைகள் அறுபத்து நான்கினதும் அடையாளமாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளது.

எனவேதான் நாடற்று – தேசமற்று; உரிமைக்கும் நீதிக்குமாகப் பல காலம் பாடுபடுகின்ற எங்கள் ஈழத் தமிழ் மக்கள் **யாழ்ப்பாணம்** என்று சொல்வதில் மனநிறைவும் அகமகிழ்வும் அடைகிறார்கள்.

தவிர, கந்தபுராண கலாசாரத்தை தங்கள் வாழ்வியலாகக் கொண்ட எங்கள் ஈழத் தமிழ் மரபில் **யாழ்ப்பாணக் கலாசாரம்** என்பது எங்கள் உயிருக்கு நிகரானது. இதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து ஏற்று, ஆவன செய்தல் வேண்டும்.

### நாம் சொல்லும்வரை காத்திருக்காது

# மகிந்த அரச வாசஸ்தலத்திலிருந்து உடன் வெளியேற வேண்டும் – நலிந்த

வெளியேறுமாறு கேட்கப்படும் வரை காத்திருக்காமல், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தாம் தங்கியுள்ள வீட்டை விட்டு வெளியேறுவது நல்லது என்று அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ நேற்று (21) தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி உரிமைகள்சட்டத்தின் விதிகளை அவர் புரிந்து கொண்டு, செயற்படவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகள் தங்கள் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு மாத்திரமே உரிமையுடையவர்கள் என்று சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய அரசாங்கங்களில் இருந்துள்ளார். எனவே நாம் கேட்டுக்கொள்ளும் வரை காத்திருக்காமல், அவர் தானாகவே வெளியேறுவது நல்லது.

மேலும் அரசியல்வாதிகளின் சலுகைகளை ஒழிக்கவும், அரசியல்வாதிகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைக்கவும் பொதுமக்கள் அரசாங்கத்திற்கு ஆணையை வழங்கியுள்ளதால், இந்த விதி அனைவருக்கும் பொருந்தும் என்றும் அமைச்சர் ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# வழக்கில் முன்னிலையாகாத செல்வம் எம்.பிக்கு பிடியாணை

*(அநுராதபுரம்)*

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

உள்நாட்டு போர் நடைபெற்ற போது இலங்கை பற்றிய தகவல்களை அதிகாரபூர்வமற்ற இந்திய ஊடகம் ஒன்றிற்கு சட்டவிரோதமாக வெளியிட்டமை தொடர்பாக அநுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றில் அவர் முன்னிலையாகத் தவறியதன் காரணமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை இந்தியாவில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்தமையால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

நீதிமன்றத்தால் வழங்கப்படும் அடுத்த திகதியில் அவர் மன்றில் முன்னிலையாகத் தயாராக இருப்பதாக செல்வம் அடைக்கலநாதனின் வழக்கறிஞர் மன்றில் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், அந்தக் காரணங்களை நிராகரித்த உயர் நீதிமன்ற நீதிபதி, பாராளுமன்ற உறுப்பினரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-7)

# 400 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வாங்கும் நிலை வரும்

### எச்சரிக்கிறார் தயாசிறி ஜயசேகர

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு அரசாங்கம் 75 ரூபாய் வரியை அறவிடுவதாகவும், இது தொடர்ந்தால் எதிர்காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 400 ரூபாவாக அதிகரிப்பதைத் தடுக்க முடியாது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு மற்றும் அரிசி இறக்குமதி தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)

# இளவாலையில் குடும்பஸ்தரொருவர் சடலமாக மீட்பு

*(இளவாலை)*

இளவாலை சென்யூட் பகுதியில் உள்ள கள்ளுத்தவறணை ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலு (வயது-64) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் கள்ளுத் தவறணையில் கள்ளருந்திக் கொண்டிருந்த வேளை திடீரென உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணைகளை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் இதய நோய் காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை இளவாலைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஆளுந்தரப்பு எம்.பிக்களின் கொடுப்பனவுகள் ஒரே கணக்கில்

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தகவல்

தேசிய மக்கள் சக்தியின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளும் ஒரே வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

நிஹால் கலப்பதியுடன் ஆரம்பமான இப்பயணத்தை தாங்கள் தொடர்வதாகவும், பொரளையில் உள்ள மக்கள் வங்கியில் தற்போதைய வங்கிக் கணக்கில் தொடர்புடைய கொடுப்பனவுகள் வைப்பிலிடப்படும் என்றும், பின்னர் அந்தப் பணம் பொதுச் சேவைக்குப் பயன் படுத்தப்படும் என்று கூறிய பிரதி அமைச்சர், இது மக்களுக்கு மேலும் சேவை செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)

# 24 மாதங்களில் ரணில் 25 நாடுகளுக்குப் பயணம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 24 மாதங்களில் 25 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார் என வெகுசன ஊடக மற்றும்சுகாதார அமைச்சர் நலிந்த ஜெயதிஸ்ஸ நேற்றுப் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சபையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பப் பட்டுள்ளது. இதனை அறிவிப்பதற்கு எமக்கு கால அவகாசம் வேண்டும். ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க 24 மாதங்களில் 25 வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

எனவே ரணில் மேற்கொண்ட ஒவ்வொரு விஜயம் தொடர்பாக நாம் வெவ்வேறாகவே பார்க்க வேண்டும்.

இதனை சபைக்கு அறிவிப்பதற்குப் பிரதமர் இரண்டு வாரகால அவகாசத்தைக் கோரியுள்ளார்.

அதன் பின்னர் சபைக்கு அறிவிக்கப்படும் என்றார். (ம-7)

# இரத்ததான முகாம்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு சேவ் ஏ லைவ் நிறுவனத்தினர் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாமானது இன்று புதன்கிழமை (22) காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 02 மணி வரை நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

04


கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.


| ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | எழுவைதீவு | J 39 | EPDP | 187 |
| 2 | ஊர்காவற்துறை | J 49, J 50, J 51 | EPDP | 626 |
| 3 | நாரந்தனை வடக்கு | J 55, J 56 | ITAK | 481 |
| 4 | நாரந்தனை தெற்கு | J 57, J 58 | EPDP | 477 |
| 5 | கரம்பன் | J 52, J 53, J54 | EPDP | 554 |
| 6 | அனலைதீவு வடக்கு | J 37 | EPDP | 223 |
| 7 | அனலைதீவு தெற்கு | J 38 | EPDP | 293 |
| 8 | புளியங்கூடல் | J 59, J 60 | TC | 390 |

## 07.நெடுந்தீவு பிரதேச சபை

நெடுந்தீவு பிரதேச சபையில் மொத்தமாக 6 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்துதெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை - 8 ஆகும்.

நெடுந்தீவு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 45.54 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டு சனத் தொகை கிட்டத்தட்ட 4069 பேர். 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 3174 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேட்சைக் குழு (IND), மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

| நெடுந்தீவு பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | நெடுந்தீவு 01 | J 01 | EPDP | 230 |
| 2 | நெடுந்தீவு 02 | J 03ன் பகுதி | EPDP | 227 |
| 3 | நெடுந்தீவு 03 | J 02 | ITAK | 95 |
| 4 | நெடுந்தீவு 04 | J 03ன் பகுதி | ITAK | 102 |
| 5 | நெடுந்தீவு 05 | J 04 | EPDP | 189 |
| 6 | நெடுந்தீவு 06 | J 05 | EPDP | 207 |
| 7 | நெடுந்தீவு 07 | J 06ன் பகுதி | EPDP | 127 |
| 8 | நெடுந்தீவு 08 | J 06ன் பகுதி | EPDP | 81 |

நெடுந்தீவு பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | நெடுந்தீவு பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 8 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 8 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 13 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 1,246 | 49.70% | 6 | 6 | - | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 808 | 32.23% | 4 | 2 | 2 | - |
| சுயேச்சைக் குழு | 292 | 11.65% | 2 | - | 2 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 97 | 3.87% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 39 | 1.56% | - | - | - | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 25 | 1.00% | - | - | - | - |
| மொத்தம் | 2,507 | 100% | 13 | 8 | 5 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 2,507 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 17 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 2,524 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 3,174 |

## 08.வேலணை பிரதேச சபை

வேலணை பிரதேச சபையில் மொத்தமாக 30 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்துதெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை -12 ஆகும். வேலணை பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 84.58 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 17816 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 12763 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழர் மகாசபை, தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (SLPP) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகியன போட்டியிட்டன.

வேலணை பிரதேச சபைத் தேர்தல் – 2018
கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வேலணை பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 12 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 12 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 20 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 3,627 | 39.08% | 8 | 7 | 1 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 2,891 | 31.15% | 6 | 5 | 1 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 899 | 9.69% | 2 | - | 2 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 737 | 7.94% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 403 | 4.34% | 1 | - | 1 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 345 | 3.72% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 306 | 3.30% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழர் மகாசபை | 74 | 0.80% | - | - | - | - |
| மொத்தம் | 9,282 | 100% | 20 | 12 | 8 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,282 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 165 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,447 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 12,763 |

| வேலணை பிரதேச சபைத் தேர்தல் – 2018 | | | | |
|---|---|---|---|---|
| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
| 1 | சரவணை | J 12, J 20, J 21 | EPDP | 292 |
| 2 | வேலணை வடகிழக்கு | J 11, J 13 | ITAK | 274 |
| 3 | அல்லைப்பிட்டி | J 10 | ITAK | 325 |
| 4 | மண்டைதீவு | J 07, J 08, J 09 | ITAK | 651 |
| 5 | வேலணை கிழக்கு | J 14, J 15, J 16 | EPDP | 415 |
| 6 | வேலணை தெற்கு | J 17 | ITAK | 98 |
| 7 | வேலணை மேற்கு | J 18, J 19 | ITAK | 327 |
| 8 | நயினாதீவு வடக்கு | J 34, J 35 | EPDP | 386 |
| 9 | நயினாதீவு தெற்கு | J 36 | EPDP | 308 |
| 10 | புங்குடுதீவு மேற்கு | J 27, J 29, J 30, J 32, J 33 | ITAK | 400 |
| 11 | புங்குடுதீவு கிழக்கு | J 22, J 23, J 24 | ITAK | 236 |
| 12 | புங்குடுதீவு மத்திய | J 25, J 26, J 28, J 31 | ITAK | 451 |

## 09. வலிகாமம் மேற்கு பிரதேச சபை

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் மொத்தமாக 25 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 15 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவை எல்லாம் தனி உறுப்பினர் வட்டாரங்களாகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை -15 ஆகும். வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 45.68 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டு சனத் தொகை கிட்டத்தட்ட 49417 பேர். 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத்தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 34292 ஆகும்.

இத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), மக்கள் விடுதலை முன்னணி (JVP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (SLPP), சுயேட்சைக் குழு (IND) மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி(SLFP) ஆகியன போட்டியிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

டன் அதன் சாரதியும் கைது செய்யப் பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் படையில் நேற்று இந்தக் கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது செம்பியன்பற்றுப் பகுதியைச் சேர்ந்த சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பிறந்த சிசுவின்...

ஸாரால் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கைதடி தென்கிழக்கு ஜே/292 கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மூர்த்தி யாவத்தைக் கந்தசாமி கோவில் பகுதி யில் உள்ள தோட்டத்தில் வேலை செய்வதற்காக வந்தவர்கள் கிணற் றில் நீர் அள்ள முற்பட்ட வேளை சிசு வின் சடலத்தைப் பார்த்ததும் கிராம சேவகர் மூலம் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்கப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உயிரிழந்த சிசு தொடர்பில் விசா ரணைகளை ஆரம்பித்துள்ள நிலை யில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்திற்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோத னைக்காக வைத்தியசாலைக்கு அனுப் பப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்ட லில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சிசுவை பிரசவித்தவர் என சந்தேகிக்கப்படும் 43 வயதான 3 பிள்ளைகளின் தாயான பெண் கிளி நொச்சிப் பகுதிக்குத் தப்பிச்செல்ல முற் பட்ட வேளை கைது செய்ததுடன் கொலைக்கு உதவி செய்திருப்பார் கள் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த பெண்ணின் தாய் மற்றும் சகோதரியையும் கைது செய்து விசா ரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (ம-7,30,33)

## ஐ.எம்.எப்...

சுமையைக் குறைக்கும் நோக்கில் கூடுதல் நிவாரண நடவடிக்கைகளை அமுல்படுத்துவதாகவும் அவர் குறிப் பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் சித்ரால் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இத னைத் தெளிவுபடுத்தினார். (ம-7)

## நிதி மோசடி...

நகைகள் களவு போன சம்பவம் தொடர்பில் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்ட நிலையில் மேலும் இருவர் நேற்று மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரூபா 2,250,000 பெறுமதியான தங்க நகைகள் மாயமானது தொடர் பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வந்த நிலையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டதுடன் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த பொலி ஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ள னர். (ம-7)

## சுமந்திரனை...

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், கடந்த 10ஆம் திகதி தமிழ்நாட்டில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட் டில் கலந்து கொள்வதற்காக கட்டு நாயக்க விமான நிலையத்தின் ஊடாக நான் இந்தியாவுக்குப் பயணமாகியி ருந்தேன்.

எனினும், எனது கடவுச்சீட்டுக் களில் பிரச்சினை இருப்பதாகத் தெரி வித்து என்னை விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

விமானம் புறப்படத் தயாராக இருந்த நிலையில் எனது கடவுச் சீட்டில் குறைபாடு உள்ளதாகவும், பயங்கரவாத குற்றத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் விசாரணை களுக்கு என்னை உட்படுத்த வேண் டும் என்றும் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் எனக்குப் பய ணத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக வும் குறிப்பிட்டனர்.

எனினும், என்னுடன் குறித்த மாநாட் டிற்கு வருகை தந்த சக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் சில முயற்சிகளுக்குப் பிறகு இறுதி நேரத் தில் பயணிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைகள் ஏதுமின்றி, சபாநாயகரின் ஆலோசனை ஏது மின்றி எனக்குப் பயணத்தடை உள் ளது என்று அதிகாரிகள் குறிப்பிட் டமை திட்டமிட்ட வகையிலான சிறப் புரிமை மீறல் என்றே நான் கருதுகின் றேன். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினரான எனக்கு எதிரான அடிப்படை சிறப் புரிமை மீறல் தொடர்பில் நான் கேள்வி எழுப்ப விரும்புகின்றேன்.

அத்துடன் இதன் பின்னணி தொடர்பிலும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், "இலங்கை யில் தடை செய்யப்பட்ட, கனடாவில் இருந்து இயங்கும் அமைப்புடன் சிறீதரன் பேச முனைந்ததாகவும், அதற்காகத்தான் அவர் சென்னை செல்ல இருந்ததாகவும், இதன் காரணத்தினால் தான் சிறீதரனை தடுத்து நிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும்" குறிப் பிட்டிருந்தார்.

ஆனால், சென்னையில் என்னைப் பார்த்த சுமந்திரன் இது குறித்து எதுவும் கூறவில்லை. ஆனால், விசாரித்து அறிந்தபோதுதான் ஊடகங்களில் இவ்வாறு செய்திகள் வந்ததை வைத்து கூறியதாகவும், இது போன்ற ஊகத்தால் விமான நிலையத்தில் சிறீதரனைத் தடுத்து நிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராக இருந்த அஸ்மின், தன்னுடைய முகநூலில் இட்டுள்ள ஒரு பதிவில், நானும், இந்தியாவின் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானும் இருக் கும் ஒரு புகைப்படத்தை வெளியிட்டு, கடந்த நாட்களில் எந்தவொரு பாராளு மன்ற உறுப்பினரும் விமான நிலை யத்தில் தடுத்து நிறுத்தப்படவில்லை. அது ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தி என்று குறிப்பிட்டுள்ளார்.

சுமந்திரன் வெளியிட்டுள்ள செய் திக்கும், அஸ்மினின் முகநூல் பதி விற்கும் இடையில் தொடர்பிருப்பதாக நான் நம்புகின்றேன். அவர்கள் இரு வரும் நல்ல நண்பர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். என்னைச் சென்னை செல்ல விடாமல் செய்ய மேற்கொள்ளப்பட்ட சதியா கவே இதைக் கருதுகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 5723
Q 9 9 0 1 5 8
அத சம்பத Q 0 1 5 8
சீட்டிழுப்பு இலக்கம் 298
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1753
C 14 26 33 35 C
Double Chance 42190

மெகா பவர்
திகதி 21/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2071
V 26 21 40 53 72

லக்கி 7 VIP
திகதி 2025.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 549
Z 6 3 2 0 4 9 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3965
சீட்டிழுப்பு திகதி 21.01.2025
H 15 19 22 72
H

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.21
சீட்டிழுப்பு இலக்கம் 1032
இடபம் 07 08 12 32 இடபம்
79388 48

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.01.2025 வெற்றி வாரம் 431
ஆங்கில எழுத்து U
3 5 7 7 8 1
67533
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,564,290.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2697
சீட்டிழுப்பு திகதி 2025.01.21 தினம் செவ்வாய்க்கிழமை
19 24 46 68 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,268,932.00

சனிதா
திகதி 21.01.2025 வெற்றி வாரம் 4858
13 14 31 54 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,580,212.40
70671

சசிரி
605
21.01.2025
செவ்வாய்க்கிழமை
03 24 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4409
சீட்டிழுப்பு திகதி 21.01.2025 தினம் செவ்வாய்க்கிழமை
29 45 51 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,953,729.60
197250

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 28 08 49 52 70
1873
21.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,622,340.40

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2523
சீட்டிழுப்பு திகதி: 2025.01.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,691,100.00
அட கோடிபதி ADA KOTIPATHI
18 37 46 61 P
883441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இந்திய யாத்திரை

## காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

**ஆரம்பம் : 10.03.2025 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15**

**தரிசிக்குமிடங்கள்**

டெல்லி, அட்சயதாம். நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற். வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி. பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள். காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலைபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி. உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்**

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
T.P - 077 768 0102/077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com
(762)

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2107)

**076 825 7716** (ஆகாஸ்)

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

---

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல குளிர்பான நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- Quality Controller (Qualification - Food Science) (பெண்)
- காசாளர் (பெண்)
- தொழிற்சாலை உதவியாளர் (பெண்)
- அலுவலக உதவியாளர் (பெண் - Excel தெரிந்தவர்)

(3072)

**076 531 1410**
(9.00 a.m - 5.30 p.m தொடர்புகொள்ளவும்)
340 c, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.

---

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (759)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/=
~~80/=~~
**076 800 6500**

---

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2106)

---

## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(3080)

---

## வேலைவாய்ப்பு

No.198, கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS PVT LTD Air Ticketing அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் (Sabre System தெரிந்தவர்கள்) விரும்பத்தக்கது அல்லது அனுபவமற்றவர்களுக்கு Training கொடுக்கப்படும் (ஆண்கள் மட்டுமே விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
**021 222 8555, 077 108 3482**
(சீ2103)

---

## தரம் 6 - O/L


ஆங்கில, தமிழ் மொழி மூலம்

**GROUP CLASSES**

**NEWTON**
**NALLUR**
**077 792 3653**
(3064)

---

# மரண அறிவித்தல்



மலர்வு
1949.12.20

உதிர்வு
2025.01.19

## திருமதி கணபதிப்பிள்ளை இராஜபூபதி

அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 15/37, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜபூபதி அவர்கள் 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பார்வதி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை(கனகலிங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் லோகிதமோகன், இளவேந்தன், சாந்தினி, சசிகரன், சுகந்தினி, அமுதினி, சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ் சென்ற நவரட்ணராஜா மற்றும் செல்வராஜா, தவராஜா, ஆனந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சோதியம்மா, பரமானந்தம் மற்றும் கனகசோதி, சரஸ்வதி, சந்திரமகிழேஸ்வரி, கலாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதானந்தராஜாவின் பாசமிகு சிறிய தாயாரும் இராஜேஸ்வரி, சந்திரப்பிரியா, சுகந்தினி, ஜெயானந்தன், புஸ்பராணி, சசிக்குமார், பகீரதன், ஜமுனா ஆகியோரின் அன்பு மாமியும் கனிமொழி, சங்கவி, அபிராம், ஆருதி, அனுஷ்கா, ஜெனிஸ்கா, சாகித்யன், விஜங்கா, அபிகேஷன், அகிம்சன், அஸ்விகன், வைஷ்ணவி, ஆரபி, நிலாணி, ஐசானி, பிரவீன், அருவின், பிரவியா, அஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2025) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15/37, மாரியம்மன் வீதி,**
**திருநெல்வேலி.**

(3079)

**தகவல்: குடும்பத்தினர்**
**077 118 5116**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org